சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: கோபால் பி.வா.சா. 1 தேதி **10.03.2026**

2, 4, 7, 12, 14 வது பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியை மீண்டும் முதல் விசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி

1) 12.02.1974ம் தேதியிட்ட மாரியப்ப செட்டியார் வகையறா செய்து கொண்ட பாகப்பத்திரம் அசல் - பி.வா.சா.ஆ30

2) பாப்பம்மாள் மருதை மற்றும் ஒருவர் பெயரில் அ.வ.166/2010ன் பிராது நகல் சான்றிட்டது - பி.வா.சா.ஆ.31 (வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தில் அசல் வழக்கு எண் என குறிப்பிடவில்லை என்பதாலும், சான்று நகல் இல்லை என்பதாலும் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).

3) 12.07.2021 – மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்டது - பி.வா.சா.ஆ.32 (மேற்படி ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

4) 12.07.2021 மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட – பி.வா.சா-ஆ.33 (மேற்படி ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

5) பாப்பம்மாள் காவல் துறையில் புகார் கொடுத்தற்கான ரசீதுகள் - பி.வா.சா.ஆ.34 (மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).

6) 06.07.2014 – CC 208/2011 வழக்கின் தீர்ப்பு - பி.வா.சா.ஆ.35 (மேற்படி தீர்ப்புரையானது இவ்வழக்கு சங்கதிக்கு தொடர்பற்றது என்பதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). வழக்கானது தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:18:00 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.